பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 18 ஞாயிற்றுக்கிழமை (31-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 65

## அரசியல் தஞ்சம் கோரிய
# 60 ஆயிரம் ஈழத்தமிழர்களின் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

## மேற்கு நாடுகள் கதவடைப்பு

கொழும்பு, ஜனவரி 31

ஐரோப்பிய நாடுகளில் தற்சமயம் வசித்து வரும் 60 ஆயிரம் ஈழத் தமிழர்கள், அங்கு அரசியல் தஞ்சம் வழங்குமாறு கோரி சமர்ப்பித்த விண்ணப்பங்களை அந்த நாடுகள் நிராகரித்திருக்கின்றன.

மேற்கு ஐரோப்பிய நாடு ஒன்றில் இயங்கும் அமைப்பு ஒன்று இத்தகவலை வெளியிட்டதாக கொழும்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, சுவிஸர்லாந்து மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகள் முன்னர் ஈழத் தமிழ் அகதிகளின் பால் அனுதாபம் கொண்டிருந்தன என்றும்—

எனினும் அரசியல் தஞ்சம் என்ற சாக்கில்] பெரும் எண்ணிக்கையில் பொருளாதார அகதிகளும் இந்த நாடுகளுக்குள் நுழையத் தொடங்கியதால் அந்நாடுகள் ஈழத்தமிழர் விடயத்தில் கடும் போக்கை கடைப்பிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜேர்மனியில் மட்டும் இருபதாயிரம் ஈழத் தமிழர்களின் அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

[உ-5]

## தபால்களை சேர்க்கலாம்

யாழ்ப்பாணம், ஜன 31

வெளியூர் தபால்களை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு முன்பாக தபால் பெட்டிகளில் சேர்க்குமாறு யாழ் பிரதம தபாலக அதிகாரிகள் பொது மக்களைக் கேட்டுள்ளனர்.

இந்தத் தபால்கள் இவ்வார இறுதியில் கொழும்பு செல்ல இருக்கும் குமாரி கப்பலில் அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-17)

## வன்னியில் ஊரடங்கு

கொழும்பு, ஜன. 31

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் இன்று காலை 10 மணி முதல் மறு அறிவித்தல் வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

கூட்டுப்படைத் தலைமையகம் நேற்றிரவு இவ்வாறு அறிவித்தது.

வவுனியாவில் நடைபெறவுள்ள இருவேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்காக பிரதமர் டி. பி. விஜேதுங்கா நாளை வவுனியாவுக்கு விஜயம் செய்ய இருக்கையில் இந்த ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்) (உ-5)

## படையினர் துப்பாக்கிச் சூடு; கட்டுவனில் சிறுவன் காயம்

அளவெட்டி, ஜன. 31

கட்டுவன் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் நேற்று மாலை 5.30 மணியளவில் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பத்து வயதுச் சிறுவன் ஒருவன் வயிற்றில் படுகாயமடைந்தான்.

ஏழாலையில் இருந்து இடம்பெயர்ந்து கட்டுவன் மேற்கில் வசித்து வந்த மனோகரன் பாஸ்கரன் என்ற சிறுவனே நேற்று மாலை பட்டம் விட்டுக் கொண்டிருந்த போது படையினரின் சூட்டுக்கு இலக்கானான். குடல் வெளியே தொங்கிய நிலையில் சிறுவன் நேற்று மாலை யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டான்.

(உ-13)

## 3 ஆயிரத்து 50 மெ. தொன் உணவுப் பொருள்களுடன் 'குமண' வருகின்றதாம்

3 ஆயிரத்து 50 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு குமண கப்பல் நேற்று யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட இருந்ததாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இதேவேளை—

500 மெற்றிக் தொன் நிவாரணப் பொருள்களுடன் 25 லொறிகள் கிளிநொச்சிக்கும், 250 மெற்றிக் தொன் அத்தியாவசியப் பொருள்களுடன் 25 லொறிகள் முல்லைத்தீவுக்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

(த)

## கிளாலிக்கு அக்கரையில் ஏராளமானோர் 'தவம்'!

யாழ்ப்பாணம், ஜன. 31

கிளாலிக் கடல் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதால், பயணிகள் பலர் அக்கரையில் ''தவம்'' கிடக்கின்றனர்.

கொழும்பு மற்றும் பிற இடங்களில் இருந்து வந்த பெரும் எண்ணிக்கையானோர் பூநகரி – நல்லூர், பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளில் பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாக கிளாலியூடான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதால், யாழ். குடாநாட்டுக்கும் வெளிஇடங்களுக்குமான

(5ஆம் பக்கம் பார்க்க)

## மாதகல் பகுதியில் 340 பேர் இன்னமும் சிக்கியுள்ளனர்

யாழ்ப்பாணம், ஜன. 31

இளவாலை, மாதகலில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இன்னமும் 340 பேர் சிக்குண்டுள்ளனர்.

போயிட்டி, விளான், மாரிசங்கூடல், இளவாலை, சேந்தாங்குளம் பகுதிகளைச் சேர்ந்த 258 பேர் இளவாலை கன்னியர் மடம், அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வயோதிபர் இல்லம் ஆகியவற்றிலும்—மாதகல் பகுதியைச் சேர்ந்த பேர் மாதகல் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு பின் புறத்தில் அமைக்கப்பட்டிருக்கும் முகாமிலும் — தங்க வைக்கப்பட்டுள்ளனர். அண்மையில் ஆயர் குழுவுடன் அப்பகுதிக்குச் சென்ற யாழ். மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் வண. எம். ஈ. பயஸ் அடிகளார் மற்றும் திருக்குடும்பக் கன்னியர் மாகாண உபதலைவி அருட்சகோதரி ஜோ... ஆகியோர் இத்தகவலை வெளியிட்டனர்.

(உ-51)

## மாதகல் படையினர் அடிக்கடி சூடு!

யாழ்ப்பாணம் ஜன. 31

மாதகலில் நிலைகொண்டுள்ள படையினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி அடிக்கடி வேட்டுக்களைத் தீர்த்து வருகின்றனர். திடீர் திடீரென ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இதேவேளை நேற்று பகல் முழுவதும் ஏழாலை, கட்டுவன், மற்றும் அளவெட்டிப் பகுதிகளை நோக்கி படையினர் விட்டு விட்டு வேட்டுக்களைத் தீர்த்தபடி இருந்தனர்.

(ஒ-28-13)

## மீட்புநிதி இன்று செலுத்தலாம்

யாழ்ப்பாணம், ஜன. 31

இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறியோர் இன்று காலை 9.30 மணி முதல் 10 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் மீட்புநிதி செலுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## முச்சந்தி முரளி



[illegible] னார் ரூபத்திலை மகா கண்டம் வருகுது போலை......

## அமைச்சரவையில் மாற்றம்: செவ்வாயன்று அறிவிப்பு?

லண்டன், ஜன. 3'

ஸ்ரீலங்கா அமைச்சரவையில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாற்றங்கள் அறிவிக்கப்படக் கூடும்.

சிங்களப் பத்திரிகையாளர் விக்டர் ஐவன் பி.பி.ஸி.யின் சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில் இத்தகவலை வெளியிட்டார்.

''அமைச்சரவை மாற்றம் அறிவிக்கப்படுவது நிச்சயம். அனேகமாக பெப்பரவரி 2ஆம் திகதி மாற்றங்கள் இடம்பெறும் எனப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த மாற்றத்தின் போது யார் யாருக்குப் பதவி பறிபோகும் என்பதோ, யாருக்குப் புதிதாக அமைச்சர் பதவி கிடைக்கும் என்பதையோ நிச்சயமாகக் கூறமுடியாது''

— இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்கு ஆபத்து வருமா?

கொழும்பு, ஜன. 31

பிரேமதாசா அரசாங்கத்தின் முன்னணி அமைச்சர்களில் ஒருவரும், அரசாங்கக் கட்சியின் பிரதம கொறடாவுமான திரு. ரணில் விக்கிரமசிங்கா தரம் இறக்கப்படலாம் எனவும், சில வேளைகளில் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்படக் கூடும் என்றும் கொழும்பில் பரபரப்பாகப் பேசிக் கொள்ளப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்காவின் மாமனாரான லேக்ஹவுஸ் அச்சகத்தின் உரிமையாளரும், விஜயா பிரிண்டேர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளருமான திரு. ரஞ்சித் விஜேவர்த்தனா மீது ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு ஏற்பட்டுள்ள கோபம் காரணமாகவே இந்நிலை தோன்றியுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

பத்திரிகையாளர் மீதான தாக்குதல்களைக் கண்டித்தும், ஜனநாயக உரிமை வென்றெடுக்கும் நோக்குடனும் நுகேகொடையில் கடந்த வாரம் அரசுக்கு எதிரான கண்டனப் பேரணியும், கூட்டமும் நடைபெற்றன. உபாலி பத்திரிகை நிறுவனமும், ரைம்ஸ் பத்திரிகை நிறுவனமுமே (விஜயா பிரிண்டேர்ஸ்) இவற்றுக்குப் பின்னணியில் நின்றன. பத்திரிகையாளர் நடத்திய பேரணி, கூட்டம் சம்பந்த

[5 ஆம் பக்கம் பார்க்க]

## பல்கலை., தொழில்நுட்ப கல்லூரிகள் திருமலையில்!

திருகோணமலை, ஜன. 31

திருகோணமலையில் ஜனாதிபதி செயலக இடம்பெயர் சேவை ஆரம்பமானதை அடுத்து அங்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

திருகோணமலையில் எதிர்வரும் மே மாதம் அளவில் இணைப்புப் பல்கலைக்கழக கல்லூரியும், தொழில் நுட்பக் கல்லூரியும் திறந்து வைக்கப்படும்.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா நேற்று திருகோணமலையில் வைத்து இந்த அறிவிப்பை விடுத்தார்.

ஜனாதிபதி இடம்பெயர் சேவை நேற்று திருமலையில்

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காசாளர் தேவை

மானிப்பாயில் இயங்கும் புகைப்பட நிலையத்தில் கடமை புரிவதற்கு பெண் பணியாளர் தேவை. புகைப் படத் துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கும், மானிப்பாய் சுற்றாடலில் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப் படும்.

சகல விபரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்குக.

இல. 490, மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

[24736]



## NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

**A/L-92** பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு

**DAY CLASSES**

ஆரம்பம்: **02-02-1993** செவ்வாய் காலை 8-00 மணி

★ எமது ஆசிரியர் குழு ★

Physics ... திரு. S. கணேசன்
Chemistry ... திரு. S. சண்முகசுந்தரம் (சண்)
Botany ... திரு. V.S. குணசிலன்
Zoology ... திரு S. ஸ்ரீகரன்
Pure/Applied Maths ... திரு P வெக்டர்-வேலாயுதம்

குறிப்பு:
★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
★ மாணவர் தொகை 20 ஆக வரையறுக்கப்பட்டுள்ளதால் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும் (சி-4396)


## 2ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



### இ. சந்திரஜோதி

மலர்வு: 18-08-1953
உதிர்வு: 08-02-1991

திதி: 31 — 01 — 1993

மரித்துப்போன மனதில் இனி உயிர் அணுக்களை எண்ணவா முடியும்; இரவு கால பூபாளமும் சந்தியா கால உதயமும், சாத்தியமில்லைத் தான். இருந்தாலும், தூரத்திலே இருந்தாலும் பார்வைக்கு மட்டும் சாத்தியமாகிற சந்திரனைப் போல பக்கத்திலே இருந்தாலும், பயங்கர தூரத்தில் ஜோதியாய் மின்னுவாய் என்றைக்கும், இருந்தாலும் எங்களுக்கு நம்பிக்கை உண்டு இறைவன் ஒரு நாள் வருவான்

நினைவில் துயருறும்:
பாசமுடன் தம்பி - பழம்,
பிரிய மகள் - டாலினி,
அன்புத் தாய்,
மைத்துனர் - பாலச்சந்திரன்,
அருமைச் சகோதரர் சகோதரிகள்.

இ. ஜெகதாஸ்,
680/2, கே.கே எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

## பண்டிதர் வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜன 31

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆதரவுடன் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், கல்விக் கோட்டங்கள் தோறும் பாலபண்டித பண்டித வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளது.

பண்டத்தரிப்புக் கோட்டத்தில் இவ் வகுப்புக்கள் எதிர்வரும் 06 ஆம் திகதி சனிக்கிழமை தொடங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்—

கழக ஆசிரியர்களும் ஜி. சீ. ஈ. (உயர்தரத்தில்) தமிழில் திறமைச்சித்தி [வி] பெற்றவர்களும் இவ் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்பு பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தில் இதற்காகப் பதிவுசெய்து கொண்டவர்களும், புதிதாக பதிவுசெய்ய விருப்புவர்களும் நாளை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு சமுகந்தரும்படி பண்டத்தரிப்புக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1993 - 03 - 10 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

#### தற்காலிக போதனாசிரியர் (கணணிப் பகுதி)

**சம்பள அளவுத் திட்டம்**

தற்காலிக போதனாசிரியர் (கணணிப் பகுதி) - ரூபா 3,737.50 (நிலையானது) மாதமொன்றிற்கு.

(பரீட்சை பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போருக்கு அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை 3,187.50 (நிலையானது) மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்.

**தகைமைகள்**

பட்டதாரி அல்லது பட்ட இறுதித் தேர்வுக்குத் தோற்றிப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழக தாபனக்கிளை சிரேஷ்ட பதிவாளர் கந்தோரில் இருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். படிவங்களையும், ஏனைய விவரங்களையும் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 20/- காசுக்கட்டளை/தபாற் கட்டளையை 23x10 ச.மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப் -
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993 - 01 - 25
(சி-4323)


## இளவாலை சென்ற ஆயருக்கு எளிமையான வரவேற்பு

குருநகர், ஜன. 31

அண்மையில் இளவாலைப் பகுதிக்கு விஜயம் செய்த யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகைக்கு, இளவாலை பங்கு மக்களால் எளிமையான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இளவாலை புனித அன்னம்மாள் தேவாலயத்தில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் நன்றிக் கூட்டுத் திருப்பலியை யாழ். ஆயர் தலைமையில் இளவாலைப் பங்குத் தந்தை வண. யேசுதாஸ், உதவிப் பங்குத் தந்தை வண. ஞா. பீற்றர், மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் வண. எம். ஈ. பயஸ் அடிகளாரும் இணைந்து ஒப்புக் கொடுத்தனர். (த 51)

### உற்சவம்

நல்லூர் ஸ்ரீ வாலையம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேகக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும். மகா கும்பாபிஷேகம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறும். (க)


## எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக் கல்லூரி அருகில்)

411/1, K. K. S வீதி, யாழ்ப்பாணம்.

### O\L DAY CLASS

பிரிவு — I

கணிதம் : பாஸ்கரன்
விஞ்ஞானம் : இரா. செல்வவடிவேல், J. J. கொலின்ஸ்
சமூகக்கல்வி : K. S. முத்துலிங்கம்
தமிழ் — சமயம் : வேல்நம்பி
ஆங்கிலம் : R சிவலிங்கம்
வர்த்தகம் : விக்கி

★ கணிதம் வாரத்தில் 6 மணி நேரமும் விஞ்ஞானம் வாரத்தில் 4 மணி நேரமும் நடைபெறும்.

ஆரம்பம்: 02-02-93 செவ்வாய் 8.00 மணி

(24738)



மாணவர் நிதியத்திற்காக
யாழ். பல்கலைக்கழக
**விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்**
வழங்கும்
குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின்

### " யார்க்கெடுத்துரைப்பேன் "

நாடகம்

இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ். பல்கலைக்கழகம்
காலம்: 31 — 01 — 93
நேரம்: மு. ப. 10-00 — பி. ப. 4-00

அனுமதிச்சீட்டுக்கள் மண்டபவாயிலில்

(சி/4326)



கோல்ட் ஸ்ரார் விளையாட்டுக் கழக
**நிதிக்காக**
மாபெரும்

### மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

இடம் :- நீர்வேலி சவாரி மைதானம்
காலம்:- 14 - 03 - 93
விண்ணப்ப முடிவு திகதி:- 10 - 02 - 93 (புதன்கிழமை)

முதலாம் பரிசு — தங்கப் பதக்கம்
இரண்டாம் பரிசு — ரொக்கப்பணம்
மூன்றாம் பரிசு — ரொக்கப் பணம்

4 ஆம், 5 ஆம் இடங்களுக்கான ஆறுதல் பரிசுகளும் உண்டு

விண்ணப்பம் பெறும் இடம்:-
சரஸ்வதி விலாஸ், கோப்பாய் சந்தி
ஆரியபவான், கைதடி சந்தி
ஜோன்சன் ஸ்ருடியோ, சுன்னாகம்

மேலதிக விபரங்களுக்கு:
T. செல்லையா ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரியடிச் சந்தி, கோப்பாய் வடக்கு.

உதைபந்தாட்ட இறுதி
06 - 02 - 93 சனிக்கிழமை
யங்றோயல் எதிர் ஸ்ரீ முருகன்

R. ஆனந்தகுமார் தலைவர் · T. அழகேசன் செயலாளர் · T. செல்லையா பொருளாளர்

(24733)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

நிவாரணத்துக்கான பொருள்களை

# கூட்டுறவுச் சங்கங்களையே கொள்வனவு செய்யப் பணிப்பு

அரியாலை ஜன. 31

வறுமை நிவாரண உணவு முத்திரை மற்றும் 1992 அக்டோபர் மாதத்துக்கான மாணவர் உணவுமுத்திரை ஆகியவற்றுக்கு உரிய பொருள்களை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே கொள்வனவு செய்து விநியோகிக்க வேண்டும் என்று யாழ் செயலகம் அறிவித்துள்ளது,

தற்போது நிலவும் சூழ்நிலையால் கூட்டுறவுச் சங்கங்களில் உணவுப் பொருட்கள் போதியளவு கையிருப்பில் இல்லை என்றும், இந்நிலையில் வெளியில் பொருள்களை வாங்கினால் அவற்றைக் கூடிய விலைக்கே விநியோகிக்க வேண்டி வரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உணவுப் பொருள்களின் விலைகள் தற்போது இரட்டிப்பாக இருப்பதால், அவற்றை கொள்வனவு செய்வதில் கூட்டுறவுச் சங்கங்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-17)

## ஸ்டான்லியும் நியமனம்

ஜனாதிபதி பிரேமதாஸாவினால் புதிய ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ள நால்வரில் முன்னாள் சபாநாயகரும் தற்போதைய சுதந்திரககட்சி எம். பியுமான திரு ஸ்டான்லி திலகரத்தினாவும் ஒருவர் என்று அறிவிக்கப்படுகிறது.

திரு எஸ் சிவராசா, ஜனாப் எஸ். எச். எம். மஹ்ரூப திரு. அனந்த டி சில்வா குணசேகரா ஆகியோர் ஏனைய ஜனாதிபதி சட்டத்தரணிகள் ஆவர், த-எ

## பிரதமர் வவுனியா விஜயம்

வவுனியாவில் நடைபெறவுள்ள இரு வேறு வைபவங்களில் கலந்து கொள்வதற்காக பிரதமர் டி. பி. விஜேதுங்க நாளை வவுனியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்கின்றார்.

அவர் அன்று காலை 8.30 மணிக்கு ஈரற்பெரிய குளத்திலுள்ள பெரகும்பா மகா வித்தியாலயத்தில் புதிய வகுப்பறைக் கட்டடத்தை திறந்து வைப்பதுடன், 10 மணிக்கு இரம்பைக்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் பரிசளிப்பு விழாவிலும கலந்து கொள்வார். (த)

## குடியேற்றம்

மண்முனை பிரதேச செயலகப் பிரிவில் அகதி முகாம்களில் தங்கியுள்ள அகதிகளை எதிர் வரும் ஏப்ரல் மாதத்திற்குள் அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தும் துரித திட்டம் ஒன்றை பிரதேச செயலகம் மேற்கொள்ளவுள்ளது.

பிரதேச செயலாளர் அ கி. பத்மநாதன் இதனைத் தெரிவித்தார். (த-எ

## யூட் போட்டோ

தீவுப் பகுதியில் புகழ்பெற்ற ஸ்தாபனம் இப்போது யாழ்ப்பாணத்தில் இயங்குகிறது.

பாஸ்போர்ட், அடையாள அட்டை மற்றும் சகலவிதமான வெளிப்புறப் படப்பிடிப்புகளுக்கும்

இன்றே நாடுங்கள்;

★ எம்மிடம் படம் பிடித்துக் கொள்பவர்களுக்கு விசேட சலுகைகள் உண்டு.

**யூட் போட்டோ,**
**இல. 51, 4ஆம் குறுக்குத்தெரு,**
**சின்னக்கடை.**

(சி-4320)

## JAFFNA COLLEGE
## LONDON ADVANCED LEVEL CLASSES

Applications are invited from suitable candidates to follow the London A/L (A E B) classes. The classes will be conducted at Vaddukoddai.

The following subjects are available: Pure Mathematics, Applied Mathematics, Chemistry, Physics and Biology.

\- PRINCIPAL.

Vaddukoddai.

(C-4307)

## 93 A/L மீட்டல் வினா-விடை வகுப்புகள்

நடைபெறுகின்றன.

கணக்கியல் **தேவதாஸ்**
சனி, ஞாயிறு 12-30 — 2-30

வர்த்தகம் **வரதன்**
4-00 — 6-00

(கடந்த 15 வருட வினா - விடைகள் செய்யப்படும்)

**BOND Institutes**
JAFFNA.

(சி-4381)

## வைத்திய சேவை

தீவகத்தில் முன்னணி ஸ்தாபனமாக இயங்கிவந்த 'இரெட்ணம் வைத்தியசாலை', 129, ஸ்ரேசன் றோட், யாழ்ப்பாணத்தில் மக்களின் நன்மை கருதி (வாட்) தங்குமிடவசதியுடன் சேவையை விஸ்தரிக்கின்றது. இரவு - பகல் சேவையுடன் நவீன எலக்ரோனிக் முறைப்படி Digital) இருதய, இரத்த அழுத்தப் பரிசோதனைகள்; சிறுநீர், இரத்தம், கர்ப்பவதிகள், சகல நோய்களுக்குரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் அனைத்து நோய்களுக்கும் மருந்துகள் தருவிக்கப்பட்டு (ஏற்புத்தடை மருந்து உட்பட-Tetanus Vaccine) சிகிச்சை அளிக்கும் வசதியுண்டு

(24707)

## CHRISTIAN CHILDREN'S FUND OF CANADA
VADDUKODDAI.

Applications are invited from Christian's (Male for the post of Clerk cum typist in English & Tamil with the knowledge of Accounts & Short-Hand. Salary negotiable.

Please apply before 15th. of February 1993 to:

The Project Officer - CCFC,
Diocesan Office,
Vaddukoddai.

(C-4?88)

## விக்னா கல்வி நிறுவனம்

52 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

பௌதிகவியல்: திரு. குணராசா

93 A/L Sat., Sun. 8-00 — 9-00
செவ்., வியா. 4-30 — 6-00

94 A/L Sat, Sun. 7-00 - 8-00

அனுமதிகளுக்கு முந்துங்கள்

(சி 4393)

## சகல பனை, தென்னை
தொழில் வல்லுனர்களுக்குமான
## முக்கிய அறிவித்தல்

பனை, தென்னை ஆகியவற்றில் இருந்து கள், பதநீர் சீவுபவர்கள் யாவரும் அந்தந்தப் பகுதி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களாக இருக்கவேண்டியது அவசியமாகும். ஆகவே நீங்கள் உங்கள் பகுதிகளில் உள்ள மேற்படி சங்கங்களுடன் தொடர்பு கொண்டு உரிய முறையில் சங்கங்களின் அனுமதியைப் பெற்று, தொழில் புரியும் மரங்களுக்கு சங்கங்களால் இலக்கமிட்டுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அனுமதியற்ற, இலக்கமிடப்படாத மரங்களிலிருந்து கள், பதநீர் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டால், அந்தந்தச் சங்கங்களால் மரங்களின் பாளைகள் வெட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இதைக் கவனத்திற்கொண்டு தங்களுக்கு ஏற்படக்கூடிய தொழில் நட்டங்களை தவிர்த்துக்கொள்ளும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தென்மராட்சிக் கொத்தணி

01. சாவகச்சேரி தெ. ப. பொ. கூ. சங்கம்
02. கொடிகாமம் ,,
03 பளை ,,

அறிவிப்போர்:
வடமாகாண தெங்கு பனம்பொருள் கூ. சங்கங்களின் சமாசம்.

(சி/4317)

## A/L DAY CLASS

ஆரம்பம்:
**02-02-1993**

CHEMISTRY —
திரு. சிவசோதி
திரு. குமரன்

PHYSICS —
திரு. சுந்தரலிங்கம்

ZOOLOGY —
திரு. அல்போன்ஸ்

BOTANY —
திரு. சதிஷ்

PURE & APPLIED —
திரு கண்ணா

**BOND INSTITUTES**

(சி-4310)

## BITSMANS
கல்வி நிறுவனம்
மானிப்பாய்.

# 93 O/L
## DAY CLASS

எமது "SUPER GRADE" ஆசிரிய குழுவினால்

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | J. R. குரி |
| கணிதம் | — | இரா. அருட்செல்வம் |
| சமூகக்கல்வியும் வரலாறும் | — | ராஜன் |
| தமிழ் | — | பாலா |
| ஆங்கிலம் | — | M A. ஹரி |
| வர்த்தகம் | — | ராஜன் |
| இந்து சமயம் | — | தர்மா |
| விவசாயம் | — | சிவராஜா |

ஆரம்பம்: 02 - 02 - 1993
செவ். 8-00 a.m.

வாரத்தில் 4 நாட்கள் வகுப்புக்கள் நடைபெறும்

(சி-4372)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாலர் வகுப்பு முதலாம் ஆண்டுக்கான அஷ்டலக்ஷ்மி A B C Book, எழுதுவினை ஏர் மற்றும் பரீட்சைகளுக்கான பொது அறிவு (இரண்டு நூல்கள்) ரூபா 60/- எங்கும் கிடைக்கும். ஸ்ரீசுப்பிரமணியம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (5746)

அல்ஷேசன் ஆண் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. தர்மகுலசிங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (24245)

Honda ஜெனரேட்டர், விடியோ கமரா, 180 டெக், J V.C. மிக்ஸர், ஸ்டீல் கமராக்கள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு B S. போட்டோ, 40A, ராஜேந்திரா றோட், குருநகர். (சி-4304)

யப்பனீஸ் ஸ்பிறிவி நாய்க்குட்டிகள், தனிவெள்ளை, கறுப்பு வெள்ளை நிறங்களில் விற்பனைக்குண்டு தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம். (5759)

சிவம் இன்டஸ்ரீசாரின் வெளியீடுகள் எல்லாப் புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. தொடர்பு: மகிமிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-4360)

ஒடியல் மா, புழுக்கொடியல் மா, ஆட்டா மா, குரக்கன் மா போன்ற உள்ளூர்த் தயாரிப்புக்களை தொகையாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும். அண்ணா கோப்பிக் கடை, யாழ்ப்பாணம். (சி-4391)

அழகிய அமெரிக்கன் ஸ்டிக்கேர்ஸ் (Strickers) மொத்தமாகவோ, சில்லறையாகவோ விற்பனைக்கு உண்டு. தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. சக்தி, 387A, கோவில் வீதி, நல்லூர். (சங்கிலியன் வீதிக்கு முன்னால்) (24721)

பூச்சி அகற்றப்பட்ட நல்ல இன சருட்டு, "வெள்ளை பொமனேரியன்" நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு தா. நவரெத்தினம் 14, விதானை ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (24720)

அடை வைப்பதற்கு ஏற்ற நல்ல இன பெண்டம், வெள்ளையன் கோழி முட்டைகள் விற்பனைக்குண்டு தொடர்பு: K அன்னலிங்கம், கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு (24730)

## மணமக்கள் தேவையா?

எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள் உள்நாடு, வெளிநாட்டு மணமக்களும் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம் (24714)

## மணமகன் தேவை

4இல் செவ்வாய், அச்சுவினி, இரசபாவம் 30 உடைய 34 வயது அழகிய A/L Bio மணப்பெண்ணுக்குப் பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். சீதனம் தரப்படும். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம் (24175)

## தவறிவிட்டது

எனது மோட்டார் சைக்கிள் அத்தாட்சிப் புத்தகம் 27 - 01 - 1993 பிற்பகல் 2 30 மணியளவில் புதிய செம்மணி றோட், வேளா தோப்புக்கு இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் சி சுல்பார், கல்வியங்காடு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (24706)

## மயூரதி வெளியீடு

கணிதம் ஆண்டு - 8 வெளிவந்துவிட்டது. ஆண்டு 9, ஆண்டு 10, O/L கடந்தகால வினா-விடை விற்பனையாகின்றன பூபாலசிங்கம், மகிமிலன், ஸ்ரீலங்கா, ஸ்ரீகாந்தா, ஸ்ரீகாந், மது, தனலக்குமி ஆகிய இடங்களில் கிடைக்கும். 5478

## மணப்பெண் தேவை

7இல் செவ்வாய், நட்சத்திரம் பூசம், 31 வயதுடைய டாக்டருக்கு பெண் டாக்டர் அல்லது இந்த ஆண்டு டாக்டர் சோதனை எடுப்பவர்கள். புதிய மாங்கல்யா மல்றிசேர்விஸ், 361, பருத்தித்துறை வீதி, நல்லூர் வசதியுடன் தொடர்பு கொள்ளவும். (5761)

செவ்வாய்க் குற்றமற்ற (பரணி இரசபாவம் 6) சவுதியில் வந்திருக்கும் 38 வயது மணமகனுக்கு 33 வயதுக்குட்பட்ட பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர் மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (24713)

## மிருதங்கம்

புதிய மிருதங்கம் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் ஓடருக்கு சலுகையுடன் செய்து தரப்படும் தரகர் தேவை இல்லை. நேரில் வரவும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், மிருதங்க தொழில் நிலையம், இல: 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (24162

## ENGLISH

ஆங்கிலம் 3 மாத ஒருங்கமைந்த பயிற்சி அளிக்கப்படுகிறது Grammar, Spoken and literature இலக்கியம் இருநாட்கள். V N Kandasamy, A I B Pat I (Lon don- Inter (London) 87, திருநெல்வேலி றோட் (ரயில் கடவைக்கு அண்மையில் கொக்குவில். (5763)

## O/L MATHS

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கு குறைந்த காலத்தில் விசேட சித்திக்கு கற்பிப்பதில் 26வருட அனுபவமுடைய ஆசிரியரால் O/L வில் கட்டாய பாடமாகிய கணித பாடத்தின் பெரும் பிரிவாகிய அட்சரகணிதம், கேத்திரகணிதம், எண்கணிதம், புதிய கணிதம் ஆகியவற்றில் பகுதிகளை 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, ஸ்டேசன் றோட் வீதி, சுண்டிக்குளி. (5762)

## CHEMISTRY

திரு. சிவசோதி B.Sc

PAPER CLASSES

சனி - ஞாயிறு

| | | |
|---|---|---|
| பிரிவு I | 3-00 | மணி |
| பிரிவு II | 4-00 | மணி |
| பிரிவு III | 5-00 | மணி |

மாணவர் வசதிக்கேற்ப ஏதாவது ஒரு பிரிவில் அனுமதி பெறலாம். ஒவ்வொரு பிரிவிலும் முழுப் பாடத் திட்டமும் மீட்டல வினா - விடை கற்பித்து முடிக்கப்படும்.

★ AL-95 பிரிவு மாணவர் அல்ல என்பதை உறுதிப்படுத்தினால் மட்டுமே அனுமதி.

ஆரம்பம்: 30-01-1993

BOND INSTITUTES, யாழ்ப்பாணம் (சி-4313)

## வீடு வாடகைக்கு

பண்புள்ள சிறிய குடும்பத்துக்கு வசதியான தனி வீடு வாடகைக்கு வேண்டும் முற்பணம் கொடுக்கப்படும். கோண்டாவிலில் இருந்து கே. கே. எஸ். வீதி, பலாலி வீதி அடங்கிய யாழ் நகர் வரையிலான பகுதிகள் விரும்பத்தக்கது கடிதமூலம் உடன் தொடர்பு கொள்ளவும்: இல. 187 மேலாளர் உதயன், யாழ்ப்பாணம். (21213)

## விமான கட்டணம் குறைப்பு

எயர்லங்கா நிறுவனம் எதிர் வரும் பெப்ரவரி மாதம் முதல் மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான தனது விமானக்கட்டணத்தை 10 சதவீதத்தால் குறைக்கும் என்று அறிவிக்கப்படுகிறது டுபாய், அபுதாபி, சார்ஜா, சூரிச், ரோம, லண்டன் ஆகிய இடங்களுக்கான கட்டணங்களே குறைக்கப்பட உள்ளன த)

இப்பொழுது நடைபெறுகின்றன

ஆண்டுகள் 4,5,6,7,8,9,10, O/L

(மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்)

SPOKEN ENGLISH With GRAMMAR

திரு. ஹரி

TYPING SHORT - HAND வகுப்புகளும்

புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 02-02-1993

BOND INSTITUTES யாழ்ப்பாணம். (சி- 4314)

BECON

(பாரதிதாசன் கல்வி நிறுவனம்) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 92

August பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான மீட்டல் வினா - விடை

புதிய பிரிவு:

- ★ பொருளியல் — வரதராஜன்
- ★ கணக்கியல் — சௌந்தி
- ★ வர்த்தகம் — பசில்
- ★ அளவையியல் — மனோகரன்
- ★ தமிழ் — மீரா
- ★ இந்து நாகரிகம் — பாலா, சைலஜா

ஆரம்பம்: 02-02-1993 செவ்வாய் 8-00 மணி

● சனி ஞாயிறு செவ்வாய் வியாழன் ஆகிய நாட்களில் ... (சி 4385)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 08 01 1929

ஆண்டவன் அடியில்: 23 01 1991

திருமதி
**மகேஸ்வரி செல்வரத்தினம்**

திதி: 31 01 1993

குடும்பத்தின் ஒளிவிளக்காய், பண்பின் உறைவிடமாய் திகழ்ந்த அன்பின் தெய்வமே! எம்மை அன்பாலும் பண்பாலும் அரவணைத்து வளர்த்தீர்கள்! காலமும், காலனும் உங்களை எம்மிடமிருந்து பிரித்து ஈராண்டாகினும், உங்கள் நினைவு என்றென்றும் நிலைத்திருக்கும். பாசத்தாயே! உங்கள் ஆத்மா சாந்தி பெற அனுதினமும் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்;
அன்புக் கணவன், மக்கள்.
மருமக்கள், பேரன் - சித்ராங்கன்,
மற்றும் உற்றார், உறவினர்கள்.

81, மானிப்பாய் வீதி,
தாவடி. (24193)

# ஓராண்டு நினைவஞ்சலி



செல்வி
**புஷ்பராணி சின்னையா**

(ஆசிரியை, யா/எழுதுமட்டுவாள் அ.த.க. பாடசாலை)

அன்னை மடியில்: 11-04-1965 ஆண்டவன் அடியில்: 11-02-1992

திதி: 31 — 01 — 1993

மல்லிகை ஒன்று நல்மணம் வீசுவதுபோல் - உன்
நல்நினைவு மலரும் எங்கள் மனங்களிலே
மனையிலில் இளையவளாய் குலவிளக்காய்
இணைந்த எம் இனிய புஷ்பா! - உயிர்த்
துடிப்புக்கள் மலரும் உன்முகத் தோற்றம்
கடிதென மறைந்து போனதுவே!
ஆண்டுகள் இருபத்தெட்டுவரை பேசிய இதழ்கள்
ஓராண்டு மௌனமாகிப் போனதுவே!
அசைவுள்ள உன் அபிநயங்கள்
அசைவற்ற நிழற்படமாய் போனதுவே!
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர், சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்கள், பெறாமக்கள்,
மருமக்கள்.

கொயிலாமனை,
கொடிகாமம். (சி 4321)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# தமிழர் கலைகள் வளரட்டும்!

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பழம்பெரும் இசை வல்லாளர் ஒருவர் இன்று விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறார்.

சங்கீதபூஷணம் கே. ஆர். நடராசா அவர்கள் நான்கு தசாப்தங்களாக இசைத்துறைக்கு அளப்பரிய சேவை புரிந்து அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கியிருக்கிறார். அவரது சிறப்பான பணிகளையும், வித்துவத்தையும் பாராட்டும் வகையில் அவரது அறுபத்தேழாவது அகவையில் 'இசைப் பேரறிஞர்'' எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவிக்கிறது அகில இலங்கைக் கம்பன் கழகம்.

இசைத்துறையில் சிறப்பான சேவையாற்றிய மூத்த கலைஞர்களுக்கு 'இசைப்பேரறிஞர்' விருது வழங்கப்படுவது இது இரண்டாவது வருடமாகும். திறமையுள்ள கலைஞர்களை இனங்கண்டு, பாராட்டி விருது வழங்கும் இந்த நல்ல பணியைச் செய்து வரும் கம்பன் கழகத்தினரின் முயற்சி வரவேற்கத்தக்கது.

ஓர் இனத்தின் தனித்துவத்தைப் பறைசாற்றும் — நிலை நிறுத்தும் — அடித்தள அம்சங்களில் கலைகளும் அடங்கும். ஆகையால் தமிழர்களாகிய எங்களது தனித்துவம் மேம்படுவதற்கு கலைகள் பேணி வளர்க்கப்பட வேண்டியவை. கலைகளைப் பேணும் பெரும் பொறுப்பில் அரைவாசிப் பங்கு கலைஞர்களுக்கு உண்டு. மிகுதிப் பாதிப்பங்கு கலைஞர்களை ஆதரித்தும் ஊக்குவித்தும் வளர்த்தும் வரும் மக்களுடையதாகும்.

திறமையுள்ள, கலைத்துறையின் வளர்ச்சிக்கு உழைத்த மூத்த கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிப்பது ஏனையோரை அத்துறையில் நாட்டம் கொண்டு உழைக்க உந்துதல் செய்வதாகும். இளம் கலைஞர்களுக்கும் ஊக்கம் அளிப்பதாக அமையும்.

ஆனால் தகுதியானவர்களும், திறமையானவர்களும் பாராட்டப்படாமலும், கௌரவிக்கப்படாமலும் புறக்கணிக்கப்பட்டு, பல்வேறு செல்வாக்குகள், முகமன் செய்தல் என்பனவற்றை அளவு கோல்களாக்கி ஒரு சிலரை பாராட்டிக் கௌரவிப்பதால் கலைகளை வளர்க்க முடியாது. அது பாதகமான விளைவை ஏற்படுத்தும்.

எனவே கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விடயத்தில் பொது நிறுவனங்களும், கலா மன்றங்களும் தங்கள் அளவு கோல்களை நேரானவையாகவும், சீரானவையாகவும் வைத்திருக்க வேண்டியது அவசியம். இல்லையேல் பட்டங்கள் கௌரவங்கள், விருதுகள், பரிசுகள் மதிப்பிழந்து போகும் அபாயம் உருவாகும். அந்த நிலைக்கு இடங்கொடுக்கக் கூடாது என்பதற்காகவே இதனை இங்கு வலியுறுத்துகிறோம்.

கலைகள் வளர்வதற்கு அந்தத் துறையில் திறமையும், அருஞ்சேவையும் ஆற்றியவர்களை உரிய அளவுகோல்கள் கொண்டு இனங்கண்டு பாராட்ட வேண்டும்; பட்டமளிக்க வேண்டும். கிராமம் தோறும் இந்நிகழ்வுகள் நடக்கவேண்டும். அப்போதுதான் ஈழத்தமிழர் கலைகள் வளரும்; மிளிரும்; பேணப்படும். அவற்றின் தனித்துவம் சிறக்கும்.

தென்னிலங்கையில் அரசு கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிப்பதில் முன்னிற்கிறது. பெரும் பங்கு வகிக்கிறது. அதன் பயனாக அங்கே கலை வளர்ச்சியில் புதிய பரிமாணங்கள், தோற்றங்கள் உதிக்கின்றன.

இங்கே தமிழர்களுக்கென அரசு ஒன்று உருவாகும் வரை கலைஞர்களை ஆதரித்து ஊக்குவிக்கும் முழுப் பொறுப்பும் பொது நிறுவனங்களையும், கலை அமைப்புக்களையும் சார்ந்து நிற்கிறது. அவற்றுக்கு உதவும் கலாபிமானிகளையும், கொடையாளர்களையும் நாடி நிற்கிறது.

# தென்னிலங்கை பிரதேசம் தீவாக மாறும் ஆபத்து?

தென்மாகாணப் பிரதேசம் முழுவதும் தீவுப் பகுதியாக மாறக்கூடிய ஆபத்து உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் தென்பகுதியில் சுண்ணாம்புக் கற்கள் பரவலாகத் தோன்றிவருவதாகவும், இதன் காரணமாக அப்பகுதி இலங்கையின் நிலப்பரப்பில் இருந்து பிரிந்து விடும் ஆபத்து காணப்படுவதாகவும் பிரபல விஞ்ஞானியான ஆதர் சி. கிளார்க் தெரிவித்துள்ளார்.

அவரது ஆருடத்தைத் தொடர்ந்து தென்மாகாணம் தீவாக மாறிவிடும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் பரவியுள்ளது. (த)

## சுப்பிரமணியம் சுவாமிக்கு எதிராக

# தமிழக அரசு தொடர்ந்த வழக்கு செல்லுபடியாகும்!

## சென்னை நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, ஜன. 31

ஜனதா தள் தலைவர் திரு சுப்பிரமணியம் சுவாமி மீது தமிழக அரசு வழக்குத் தொடர்ந்தது செல்லுபடியாகும் என்று சென்னை குடியியல் நீதிமன்ற நீதிபதி கே. பொன்னுசாமி தீர்ப்பளித்தார்.

ஜெயலலிதாவுக்கு எதிராக சுவாமி சுமத்திய குற்றச்சாட்டுக்கள் முதலமைச்சர் என்ற முறையில் அவருடன் தொடர்புடையது என்று ஆட்சேபித்து முதல்வர் சார்பில் அரசு வழக்கறிஞர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

ஆனால் தான் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் முதலமைச்சர் என்ற முறையில் அவருடன் தொடர்புடையதல்ல என்றும் — எனவே தன் மீது வழக்குத் தொடர அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தக் கூடாது என்றும் தனது பூர்வாங்க ஆட்சேபனையில் சுவாமி தெரிவித்திருந்தார்.

ஆனால் சுவாமியின் வாதம் நிராகரிக்கப்பட்டதுடன், அவரது குற்றச்சாட்டுக்கள் முதலமைச்சர் என்ற முறையில் செல்வி ஜெயலலிதாவுடன் தொடர்புடையதாகும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

# கிராம அலுவலர் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ். மாவட்ட கிராம அலுவலர்களின் பணித்திறனை மேம்படுத்தவும், பல்துறைகளில் அவர்கள் தரத்தினை உயர்த்தவும், கிராம அலுவலர்களுக்கான மூன்று மாதகாலப் பயிற்சிநெறி யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகினால் நடத்தப்படவுள்ளது. யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 500க்கு மேற்பட்ட கிராம அலுவலர்கள் அனைவரும் இப்பயிற்சிநெறியில் தொகுதி தொகுதியாகப் பயிற்சி பெறவுள்ளனர்.

7 கிராம அலுவலர்களை உள்ளடக்கிய முதற்தொகுதியினருக்கான பயிற்சி வகுப்புகள் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகவுள்ளன. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி முதல் பி. ப 1-30 வரை வகுப்புகள் இடம்பெறும். விரிவுரைகள், கலந்துரையாடல்கள், செய்முறைகள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், அரசாங்க உயர்நிலை அதிகாரிகளும் பயிற்சி வகுப்புகளை நடத்தவுள்ளனர். பயிற்சிநெறியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். (க)

# கம்பன் கழகம் நடத்தும் இசையாராதனை இன்று

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீதியாகராஜா சுவாமிகள் இசையாராதனை இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

''துர்க்கா துரந்தரி'' செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் காலை நிகழ்ச்சிகளில் சங்கீத பூஷணம் திரு. கே. ஆர். நடராசாவுக்கு கம்பன் கழகத்தின் 'இசைப் பேரறிஞர் 1993'' விருதை யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா வழங்குவார்.

யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் மாலை நிகழ்ச்சிகளில் திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன், சங்கீத பூஷணம், திரு. கே. ஆர் நடராசா, சங்கீத பூஷணம் திரு. எல். திலகநாயகம் போல், சங்கீத பூஷணம் திரு. எஸ் பத்மலிங்கம் ஆகியோர் பங்குபற்றும் இசையாராதனை நடைபெறும். (க)

# சமுதாய முன்னேற்ற பணியில் மாணவர் பங்கு முக்கியமானது

## பாராட்டு வைபவத்தில் இளங்குமரன்

யாழ்ப்பாணம், ஜன. 31

'சமுதாய முன்னேற்றப் பணியில் மாணவர்களின் பங்கு மிகவும் முக்கியமானது. இதனைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு மாணவனும் தமது கல்வியில் கவனத்தைச் செலுத்த வேண்டும்.'

பரீட்சைகளில் அதி திறமையுடன் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்து நாயன்மார்கட்டு சன சமூக நிலையம் நடத்திய வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீக் கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் இவ்வாறு கூறினார்.

இந்நிகழ்ச்சியும் [illegible] நிலையத்தின் மாதாந்த அறிவியலரங்கும் கடந்த 25ஆம் திகதி திரு எஸ். கமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

திரு. இளங்குமரன் மேலும் பேசுகையில்—

'கல்வி கற்பதற்குரிய சாதனங்கள் அற்ற நிலையில், ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட தடைகளுக்கு மத்தியில் கல்வியிலும், சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு இரண்டிலுமே வெற்றிகண்ட மாணவர்கள் பாராட்டுக்குரியவர்கள்' என்று கூறினார்.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 4ஏ பெற்ற மாணவன் [illegible] னொடிப் பரீட்சையில் இற[illegible] [illegible] மாணவிகள், ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ஆகியோரைப் பாராட்டி நடைபெற்ற இந்த வைபவத்தில் திரு. சொக்கலிங்கம், திரு. குகதாசன், திரு. மதியழகன், திரு. சிவகுமார், திருமதி கோபாலரத்தினம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

அறிவியல் அரங்கில் சிறப்புச் சொற்பொழிவாற்றி திருமலை யோகேந்திரம், திருகோணமலையில் அரசு திட்டமிட்டு நடத்திவரும் சிங்களக் குடியேற்றத்தின் வரலாற்றையும் அதன் நோக்கத்தையும் அதற்கெதிரான போராட்டத்தையும் விவரமாக எடுத்துக் கூறினார்.

(க-111)

# தென்பகுதிக்கு இடமாற்றம்

தென்மராட்சி, ஜன 31

யாழ் மாவட்டத்திலுள்ள அரச வடிசாலைக் கூட்டுத்தாபனத்தின் சில ஊழியர்கள் தென்பகுதியிலுள்ள வடிசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டதாக அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் கடந்த வாரமே சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணம், கைதடியில் உள்ள அரச வடிசாலைக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு கடந்த ஆறுமாதங்களாக வேதனம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(த-117)

# நாளை

ஊர்காவற்றுறைப் பிரிவு செஞ்சிலுவைச் சங்கத்தின் 1993 ஆம் ஆண்டுக்குரிய புதிய தையற் பயிற்சி வகுப்புகள் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் கோவில் வீதியில் உள்ள 59 அம் இலக்க அலுவலக மனையில் ஆரம்பித்து வைக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது (க)

o o o

இவ்வாண்டு கூட்டுறவுத் தராதர பத்திர சாதாரண பிரிவில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளன.

[க-162]

o o o

குழந்தைகளின் போசாக்கு பற்றிய விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை நடத்துவோருக்கான பயிற்சி வகுப்புகள் யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவப் பிரிவில் நாளை திங்கட்கிழமையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறையின் தலைவர் டாக்டர் ந. சிவராசா தலைமையில் நடைபெறும் இவ்வகுப்புகளில் அரச சார்பற்ற நிறுவனங்களின் தொண்டர்களும் குடும்ப நல சேவையாளர்களும் கலந்து கொள்வார்கள் [க-162]

o o o

மானிப்பாய், ஜன 31

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை திங்கட்கிழமை அதிபர் திருமதி ய. தியாகராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை, மருதனார்மட கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சிவானந்தன், மானிப்பாய் கொத்தணி அதிபர் திரு. சி. கேசவராயன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(உ-90)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 31

ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ். கிளை ''எச். என். பி'' வெற்றிக் கேடயத்துக்காக நடத்திவரும் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று நடைபெறும்.

இன்று மாலை 4 30மணிக்கு ஆரம்பமாகும் இறுதியாட்டத்தில் யாழ் பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஷப்றா அணி மோதும்.

முன்னதாக பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் பெண்கள் கூடைப்பந்தாட்ட கண்காட்சி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக மகளிர் அணியை எதிர்த்து யாழ் திருக்குடும்ப கன்னியர்மட மகளிர் அணி மோதும்

இந்தப் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கலந்துகொள்வார்

(உ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன 31

கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் நடத்திவரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று மாலை கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடைபெறவிருக்கும் ஆட்டங்கள் வருமாறு:

★ உரும்பராய் சென் மைக்கல் அணி எதிர் குருநகர் தொடர்மாடி அணி

★ நாவாந்துறை சென். நிக்கலஸ் அணி எதிர் ஊரெழு றோயல் அணி

(உ)

## ரணில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மான சுவரொட்டிகள், பிரசுரங்களை இந்த இரண்டு நிறுவனங்களும் இலவசமாக அச்சடித்து வழங்கின வாம். இரண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கண்டன கூட்டத்தில் உரையாற்றினர்

இதனால் ஆத்திரமுற்ற அரசாங்கம், 'மக்கள் வங்கி, இலங்கை வங்கிகளின் காசோலைகளை அச்சடிப்பதற்கு லேக்ஹவுஸ் அச்சகத்துக்கு வழங்கிய ஓடர்களை ரத்துச் செய்துவிட்டது.

திரு. ரஞ்சித் விஜேவர்த்தனாவினால் உண்டாக்கப்பட்டுள்ள நெருக்கடி அவரது மருமகன் ரணில் விக்கிரமசிங்கா மீதும் பிரதிபலிக்கலாம் எனக் கூறப்படுகிறது ரணில் விக்கிரமசிங்காவின் தாயார் (ரஞ்சித்தின் சகோதரி) லேக்ஹவுஸ் அச்சகத்தின் இயக்குநர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தை சிறிமா அரசாங்கம் சுவீகரித்தபோது அதன் வர்த்தக அச்சகப் பிரிவாக இயங்கிய லேக்ஹவுஸ் அச்சகத்தை (பிரிண்டேர்ஸ் அன்ட் பப்ளிசேர்ஸ் பிரிவை) கையேற்கவில்லை.

மாமனார் ரஞ்சித்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியால் மருமகன் ரணிலின் அரசியல் அந்தஸ்து குறைந்து போகலாம் என அஞ்சப்படுகிறது. அது அரசாங்கத்தில் பெரும் குழப்பத்தை, உட்பூசலை உண்டு பண்ணும் என்றும் அவதானிகள் கருதுகிறார்கள்

[அ-9]

## கிளாலிக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, வவுனியாவில் இருந்து வந்த பல லொறிகள் நல்லூர்ப் பகுதியில் தரித்து நிற்பதாகவும், அவற்றில் மண்ணெண்ணெய் மற்றும் உணவுப் பொருள்கள் போன்றவை ஏராளமாக தேங்கிக் கிடப்பதாகவும் தெரியவருகிறது

இதற்கிடையில் —

கிளாலிக் கடற் பிராந்தியத்தில் கடற்படையினரின் ரோந்து அதிகரித்துக் காணப்படுவதாகவும், அப்பகுதியில் விமான ரோந்தும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

[ஒ-15-17]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு வேலும் மயிலும்

(ஓய்வுபெற்ற கூட்டுறவுத்திணைக்கள கணக்காய்வாளர்)

நவக்கிரி, புத்தூரைச் சேர்ந்த முருகேசு வேலும் மயிலும் காலமானார்

அன்னார் இரத்தினசிகாமணியின் அன்புக் கணவரும், முகுந்தன் (சுகாதார தரிசிபபாளர் கரணவாய்), சசிகலா (ஓன்ரியா முன்னாள் ஆசிரியை), குருபரன் (உரிமையாளர் சூரியா மருந்தகம்), நளினிகலா ஆகியோரின் பாசமிகுதந்தையும், சந்திரகாந்தனின் (ஓஸ்ரியா), அன்பு மாமனுவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நவக்கிரி புத்தூர். மனைவி, பிள்ளைகள்.
[24737]

## திருமதி சிவபாக்கியம் கந்தையா

(ஓய்வு பெற்ற ஆசிரியை
திருநெல்வேலி இ. த. க. பாடசாலை)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிவபாக்கியம் கந்தையா 29 01-93 இல் கொழும்பில் காலமானார்.

இவர் திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த சிவக்கொழுந்து கந்தையாவின் (ஓய்வு பெற்ற லிகிதர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற இரத்தினம், சோதிப்பிள்ளை புண்ணியமூர்த்தி (மலேசியா), இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்திராணி, ஜெயராணி (ஆசிரிய கலாசாலை, பலாலி), ரேணுகா (ஆசிரியை கொக்குவில் இந்துக் கல்லூரி), ரதிலக்ஷ்மி (ஆசிரிய கலாசாலை, பலாலி), ஜெயலக்ஷ்மி ஆகியவர்களின் அன்புத் தாயாரும் சபேசன் (சவுதிஅரேபியா), கதிர்காமநாதன் (D. O. கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதீப், பிரவீன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாருடைய ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. கந்தையா
(கணவர்)
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (சி/4324)

## சி. பரமானந்தர்

தொல்புரம் மேற்கைச் சேர்ந்த சிவசிதம்பரம் பரமானந்தர் (ஓய்வு பெற்ற அரசசேவை எழுதுவினைஞரும், கொழும்பு பொன்னம்பலவாணேசுவரர் ஆலய முன்னாள் முகாமையாளரும்) 30-01-93 அன்று சிவபதம் அடைந்தார்.

இவர் தனபாக்கியத்தின் அன்புக் கணவரும், ராஜகோபாலன் (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), சியாமளாதே , மஞ்சுளாதேவி, மதனகோபாலன் (ஆசிரியர் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் அருமைத் தந்தையும், செல்வநாயகம் (லங்கா சீமெந்து லிமிடெட்), கைலேஸ்வரி, கலாமதி ஆகியோரின் மாமனாரும், வைத்தீஸ்வரனின் (தபால் அதிபர் பூண்டுலோயா) சகோதரரும், ஸ்ரீவத்சன், ஸ்ரீபுராதனி, ஸ்ரீகிரிசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். இறுதிக்கிரியைகள் இன்று (31-01-93) காலை 8மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொன்னாலை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
ப. ராஜகோபாலன் (மகன்).
தொல்புரம் மேற்கு,
சுழிபுரம். (24732)

## செல்வி ராஜி பாலச்சந்தர்

(ஜேர்மனி)

செல்வி ராஜி பாலச்சந்தர் ஜேர்மனியில் 25-01 93 இல் காலமானார். அன்னார் பாலச்சந்தர்-இரஞ்சனிதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வியும், சரவணனின் அன்புச் சகோதரியும், சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் மயில்வாகனம் கந்தையா - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்புப் பேர்த்தியும், சிவஞானசூரியர் (R.M.P. கொழும்பு), ஜெயபாலகணேசன் (இ.மி ச. யாழ்ப்பாணம்), சிவநேசன் (இலங்கை வங்கி - கொழும்பு), நித்தியானந்தன் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), ராஜேஸ்வரன் (கனடா), சத்தியசீலன் (கனடா), காலஞ்சென்ற சச்சிதானந்தன் (ரிசேர்வ் பொலீஸ் யாழ்.), பரிமளாதேவி (கொழும்பு, விமலாதேவி (ஜேர்மனி), வசந்தாதேவி (ஜேர்மனி), சுசீலாதேவி (கனடா), பத்மராசன் (கைதடி), பரராசன் (கிறீஸ்), பாலச்சந்திரன் (கொழும்பு), பாலேந்திரன (ஜேர்மனி , ராஜ்குமார் (ஜேர்மனி), நடராசன் (கனடா) சுஜிதா, லஜிதா, செந்தூரன், பானுகா, சௌமியா, பிரசன்னன், பானுரதன், சுகிர்தினி, சுதாசினி, காலஞ்சென்ற திவ்வியசொரூபினி அனித்தா, ஜீவகி, ஸ்காந்தா அம்பிகா தேவி ஆகியோரின் மருமகள், பெறாமகள், மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
ம. கந்தையா,
(இளைப்பாறிய ஆசிரியர்)
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி. (24718)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 2922 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 31-01-1993 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

## மகாத்மாவுக்கு அஞ்சலி

புதுடில்லி, ஜன 31

மகாத்மா காந்தி உயிர்நீத்த தினமான நேற்று இந்தியா முழுவதும் அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

புதுடில்லியில் மகாத்மாவின் சமாதி அமைந்துள்ள ராஜ்கட்டில் ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா, பிரதமர் நரசிம்மராவ் மற்றும் அரசியல் பிரமுகர்கள், பெரியார்கள் உட்பட பலரும் மலரஞ்சலி செலுத்தினர்.

1948 ஆம் ஆண்டு இதே தினத்தில் மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஓ

## பல்கலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமானது. இதனை முன்னிட்டு சகல அமைச்சர்களுமே அங்கு முகாமிட்டுள்ளனர்.

திருமலை மக்கள் சார்பில் சட்டத்தரணிகள் எம். சந்திரபாலன், சுகாசினி வரதன் மற்றும் டாக்டர் கே. ஹேமச்சந்திரன் ஆகியோர் விடுத்த வேண்டுகோளை அடுத்தே மேற்கண்ட அறிவிப்பை ஜனாதிபதி பிரேமதாசா விடுத்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபை கட்டடம் ஒன்றில் இயங்கவிருக்கும் இணைப்புப் பல்கலைக்கழக கல்லூரிக்கு 120 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும்—

திருமலை சென் ஜோசப் கல்லூரிக்கு அருகிலுள்ள கட்டடம் ஒன்றில் தற்காலிகமாக இயங்கவிருக்கும் தொழில்நுட்பக் கல்லூரிக்கு 300 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கான புதிய வைத்தியசாலை ஒன்றும் இவ்வருட இறுதிக்குள் திருமலையில் அமைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பாரிய வேலைத் திட்டத்துக்கு இத்தாலி அரசாங்கம் உதவ உள்ளது. இத்திட்டத்துக்கு ஏற்கனவே இத்தாலி 50 கோடி ரூபாவை வழங்கியிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய இடம்பெயர் சேவையில் பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

[ஓ-க]


நியூ

மற்ஸ் அக்கடமி

(வானவில் முன்பாக)
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

★ O/L 93

கணிதம் Dக்கு
உத்தரவாதம்

MATHS - சங்கர்

சனி, ஞாயிறு
வகுப்புகள்
நடைபெறுகின்றன.

| ஆண்டு | நேரம் |
|---|---|
| 11 (O/L) | 6 — 7 |
| 11 O/L) | 2 — 3 |
| 10 | 9 — 10 |
| 9 | 12 — 1 |
| 8 | 11 — 12 |
| 7 | 1 — 2 |
| 6. 5 | 10 — 11 |

(சி/2326)


## வெளிநாட்டு வான் கடித புதிய கட்டண விவரம்

யாழ்ப்பாணம், ஜன

புதிய வெளிநாட்டுத் தபாற் கட்டணங்கள் க திங்கட்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணக் குடாநா அமுலுக்கு வந்துள்ளது தெரிந்ததே.

வான் கடிதங்களுக்கான புதிய கட்டணங்கள் நாட் நாடு வேறுபட்டுள்ளது. அந்த கட்டணங்கள் 5 ரூபா 7 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளன.

நாட்டுக்கு நாடு புதிய, பழைய கட்டண விவர வருமாறு:-

| நாடு | | புதிய கட்டணம் | பழைய கட்ட |
|---|---|---|---|
| கனடா | — | ரூ 22/- | ரூ 15/- |
| அமெரிக்கா | — | ரூ 22/- | ரூ 15/- |
| ஆஸ்திரேலியா | — | ரூ 20/- | ரூ 13/- |
| சுவிஸ் | — | ரூ 20/- | ரூ 13 - |
| இங்கிலாந்து | — | ரூ 20/- | ரூ 13/- |
| நோர்வே | — | ரூ 20/- | ரூ 13/- |
| பிரான்ஸ் | — | ரூ 20/- | ரூ 13 - |
| இத்தாலி | — | ரூ 20/- | ரூ 13/- |
| டென்மார்க் | — | ரூ 20/- | ரூ 13/- |
| ஹொலண்ட் | — | ரூ 20/- | ரூ 13/- |
| ஜேர்மனி | — | ரூ 20/- | ரூ 13/- |
| ஈரான் | — | ரூ 7 - | ரூ 1/- |
| ஈராக் | — | ரூ 17/- | ரூ 11/- |
| குவைத் | — | ரூ 17 - | ரூ 11/- |
| சவுதி அரேபியா | — | ரூ 17/- | ரூ 11/- |
| ஓமான் | — | ரூ 17/- | ரூ 11/- |
| துபாய் | — | ரூ 17 - | ரூ 11/- |
| சிங்கப்பூர் | — | ரூ 17/- | ரூ 11/- |
| இந்தியா | — | ரூ 15/- | ரூ 10/- |
| பாகிஸ்தான் | — | ரூ 15/- | ரூ 10/- |

(அ-1

## ரஷ்யா பாகிஸ்தானுக்கு ராணுவ உதவி வழங்காது

பாகிஸ்தானுக்கு இராணுவ மற்றும் தொழில் நுட்ப உதவிகளை வழங்கப் பேசவதில்லை என்று ரஷ்யா அறிவி து உள்ளது. ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சின் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் நேற்றுப் பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

காஷ்மீர் பிரச்சினையில் இந்திய நிலைப்பாட்டைத் தாம் ஆதரிப்பதாகவும் திரு. யெல்ட்சின் தெரிவித்தார்.

இந்தியாவும் ரஷ்யா தற்போது கைச்சாத்தி நட்புறவு உடன்படிக்க மூன்றாவது நாடு எதற் எதிராகப் பயன்படுத்தப் மாட்டாது என்றும் அவர் னார்.

அந்த உடன்படிக்கை இ யாவின் இறைமை, ஐக்கி மற்றும் ஒருமைப்பாடு ஆ வற்றை பாதுகாக்கப் ப படுத்தப்படும் என்றும் அ தெரிவித்தார். (த-எ

## சின்னக் கருவேலம் நடுகை

யாழ்ப்பாணம், ஜன. 31

கிளிநொச்சிப் பகுதியில் சின்னக் கருவேலம் விதை பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் துரித நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக விசுவமடு, ஊரியான், துணுக்காய், பாண்டியன் குளம், கிளிநொச்சி மேற்கு ஆகிய பிரதேசங்களில் உள்ள உற்பத்திக் குழுக் மூலம் விதை விநியோகிக் பட்டது.

கிராமங்களில் ஏற்படும் குத் தேவையை பூர்த்தி செ தல், மண்ணரிப்பைத் த தல், உவர் நிலங்களில் வதன் மூலம் உவர்த் மையை நீக்குதல் போ காரணங்கள் இப் பயிரு சிறப்பம்சங்களாக காணப் கின்றன.

## நன்றி நவிலல்

ராஜி சுகவீனமுற்றிருந்த காலத்தில் ஜேர்மனி நகருக்கு நேரில் விஜயம் செய்து பிரார்த்தித்த அருட்திரு க. முருகேசு சுவாமிகள் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகிறோம்.

ம. கந்தையாவும்,
குடும்பத்தினரும்.
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி. [24719]

# மரண அறிவித்தல்

## தம்பு நாகலிங்கம்

கந்தர்மடம், மணல்தறை ஒழுங்கையைச் சேர்ந்த தம்பு நாகலிங்கம் (புகையிலை வியாபாரி) 30 1-93இல் காலமானார். இவர் அன்னலக்ஷ்மியின் அன்புக் கணவரும், அருளானந்தம் (விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி, கச்சேரி, யாழ்ப்பாணம்), சண்முகநாதன், இந்திரா, கருணாநிதி, குகதாசன் (பாலா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னலட்சுமி, சோதிமலர், செல்வராசா (நூலகம், யாழ். பல்கலைக்கழகம்), மஞ்சுளா, புனிதவதி ஆகியோரின் அன்பு மாமனாரும். அருட்செல்வி, அருளரசி, அருள்கரன், நிஷாந்த், உஷாந்த், வைஷ்ணவி, தர்மிகா, தர்ஷிகா, பிரியங்கா, அருள்குகன், விஜித்தா, கஜானன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. அருளானந்தம்
(மகன்)
35/2, மணல்தறை லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [24739]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org